**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 234/2019**

**வாதி தரப்பு சாட்சி-1 முத்துலிங்கம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 12.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**7, 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பு 7, 8 பிரதிவாதிகளுக்கு ஏதேனும் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. 7, 8 பிரதிவாதிகள் பெயரில் பட்டா ஏற்பட்ட விபரம் எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டுதான் தெரியும். அதற்கு முன்பு தெரியாது. மேற்படி பட்டா நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். வா.சா.ஆ.2 பட்டா சந்திரன், சீனிவாசன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 சந்திரன், சீனிவாசன், இந்தியா சிமெண்ட் கம்பெனி பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ-2 மற்றும் 3 ஆகியவை வழக்கறிஞர் அறிவிப்பு கொடுப்பதற்கு முன்னிட்டு வாங்கப்பட்டது என்றால் சரிதான். இராசமூப்பன் மனைவி கருப்பாயி என்றால் சரிதான். சந்திரன், சீனிவாசன் தாவா சொத்தை பொறுத்து கருப்பாயி அம்மாள் 13.08.2003 ம் தேதியில் உயில் எழுதிவைத்துள்ளதாக கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான்.

2) மேற்படி உயில் ஆவணத்தை நகல் வாங்கிப் பார்த்தேனா என்றால் இல்லை. உயில் எந்தெந்த சொத்துக்களுக்கு எழுதப்பட்டது என 1, 2 பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்கிறார்கள் என்றால் அதுபற்றி தெரியாது. கருப்பாயி அம்மாள் 02.09.2003 ல் இறந்த பின்னிட்டு உயிலில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு அவர்கள் தனித்த சுவாதீனத்தில் இருந்து தங்கள் பெயருக்கு பட்டா பெற்று அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. ஐந்துபேரும் கூட்டாக தான் அனுபவம் செய்து வருகிறோம். பட்டாவில் பெயர் மாற்றம் செய்துதரவேண்டுமென வருவாய்த்துறையில் நான் ஏதேனும் விண்ணப்பம் செய்தேனா என்றால் இல்லை. கூட்டாக அனுபவம் செய்வதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்களிடம் உள்ளது. 7, 8 பிரதிவாதிகள் தாங்கள் கிரையம் பெற்ற சொத்தை உரிமை ஆவணங்களை முறையாக பார்வையிட்ட பின்னிட்டுதான் சர்வே எண்.756/9 பி-ல் 0.62.5 ஹெக்டேர் நிலத்தில் குறிப்பிட்ட நான்கெல்லைக்கள் 80 செண்ட் நிலத்தை உரிய கிரைய தொகை செலுத்தி 26.07.2013 ல் கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரியல்ல.

3) அந்த கிரைய ஆவணத்தில் மூல ஆவணங்கள் பற்றியும், 7, 8 பிரதிவாதிகள் பெயரில் உள்ள பட்டா பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 7,8 பிரதிவாதிகள் 1, 2 பிரதிவாதிகளிடம் பெற்ற கிரையச்சொத்தை ஒட்டி பல நபர்களிடம் இருந்து பலசொத்துக்கள்

கிரையம் பெற்றுள்ளனர் என்றால் சரிதான். 7, 8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற சொத்தில் அவர்கள் விருப்பம்போல் ரோடு அமைப்பதை ஆட்சேபணை செய்ய எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல. 7, 8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விபரம் அருகில் உள்ளவர்களுக்கும், ராசு மூப்பன் குடும்பத்திற்கும், குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும் என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகள் விற்ற சொத்தில் தொடர்ந்து சட்டத்திற்கு உட்பட்ட காலத்திற்குமேல் அனுபவம் செய்துவந்து அதை 7, 8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற தேதிமுதல் தற்போது வரை தொடர்ச்சியான அனுபவத்தில் இருந்து வருவதால் 7, 8 பிரதிவாதிகளுக்கு அனுபவம் பாத்தியம் சித்தித்து உள்ளது என்றால் சரியல்ல. 26.07.2013 ம் தேதி முதல் 7, 8 பிரதிவாதிகள் கிரைய சொத்தில் அனுபவத்தில் இருந்து வரும் நிலையில் 2019 ல் இவ்வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்லியுள்ள சங்கதிகள் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4) 7, 8 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும், 7, 8 பிரதிவாதிகளிடமிருந்து துர்லாபம் அடையும் எண்ணத்தில் பொய்யான சங்கதிகளுடன் இவ்வழக்கை 7, 8 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் இவ்வழக்கில் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கை 7, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**